கார் வைத்துள்ள, ஜீப் வைத்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று, அந்தப் பெட்ரோலுக்கான பில்லை பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் கொடுத்தால் அதற்கு பணம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டினை அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது தவறான போக்கிற்கு வழி செல்லும் சூழ்நிலையை உருவாக்கிவிடும். ஆகவே, அந்த நிலை சரியாக இருக்காது.

வத்தலக்குண்டிலுள்ள அரசு மருத்துவமனையை
விரிவு படுத்தும் திட்டம்.

*வினா எண் 618—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலக்கோட்டை தொகுதி வத்தலகுண்டிலுள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி, புதிய கட்டிடம் கட்டி, 32 படுக்கை வசதி உடையதாக ஆக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால் எப்போது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

*வினா எண் 619—**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை பிரச்சாரத்தின் மூலம் தீவிரப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) அதற்காக சென்ற ஆண்டு அரசால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?